Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 2, January 2023 E-ISSN: 2583-0481

# Contribution of Tamil Theology to Indian Philosophy

**Dr. M. Christy,** Assistant Professor, Department of Tamil, Bishop Heber College,
Tiruchirappalli – 17, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-4221-4299
**DOI: 10.5281/zenodo.7583771**

## Abstract

*Indian ethics is generally oriented and seems to have reached society through religion. But apart from religious virtues mentioned in religious texts, ethics for society is constructed in society, practical life and even from folk customs, when studying other Indian literary texts, especially the ancient literature of Tamil, one of the classical languages of India. As evidence, there is strong enough evidence that domestic ideals may have been derived from South Indian literary genres. Among the three things that give assurance to life, virtue, material, and pleasure (Aram, Porul, Inbam), virtues and pleasure in Tamil exemplify the moral levels of pleasure shared by men and women. It can be said that family morals are strongly structured in Sangam literary summaries such as 'Ettuththogai' and 'Pathuppattu' and moral texts like "Thirukkural". The value that the rest of the world has over India lies in its culture, especially its unity in diversity. Therefore, there is a great need to convey the understanding of morality to the younger generation and children. In this way, the moral concepts found in India's diverse nationalities have been taken in general, and the role of Palandamizil in them and the exchanges it has given and received have been investigated.*

**Keywords**: Ethics, Wealth, Pleasure, Philosophy, Falsehood-Truthful.

## References

[1] Elampooranar Urai. *Tholkappiyam*. Saratha Pathippagam, Chennai, Third Edition, 2006.
[2] Dr. S. Usha Rani. *Barathiyar Kavithaikal*. Varththamanan Pathippagam, Chennai, 2019.
[3] Prof. J. Srichandiran. *Manimegalai*. Varthamanan Pathippagam, Chennai, 2004.
[4] Namakkal Kavigar Urai. *Thirukural*. Pazhaniyappa Brothers, Chennai, 3rd Edition, 1999.
[5] Solomom Pappaiya. *Purananooru*. Kavitha Publication, Chennai, First Edition, 2019.
[6] Dr. R. Jeyapal. *Agananooru*. New Century Book House, Chennai, Third Edition, 2007.
[7] Dr. A. Dakshinamoorthy. *Ingurunooru*. New Century Book House, Chennai, 2007.
[8] Aringar S. V. Subramaniyan. *Kalithokai*. Manivasagar Pathippagam, Chennai, 1981.
[9] Dr.V. Nagarajan. *Kurunthokai*. New Century Book House, Chennai, Third Edition, 2007.
[10] Dr.G.V. Balasubramaniam. *Narrinai*. New Century Book House, Chennai, 2007.
[11] S. V. Subramaniyan. *Paripadal*. New Century Book House, Chennai, 2010.
[12] N. Subramanian. *Sanga Kala Vazhviyal*. New Century Book House, Chennai,1986.
[13] Gopalakirishnamachariyar, V. M.(Urai). *Kambaramayanam. Balakandam*. Uma Pathippakam, Chennai, 2006.
[14] *Palaya Urai Aasiriyarkal*. *Pathinenkeelkanakku*, *Inthinai Impathu*. Manavar Pathippakam, Chennai, 2014.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# இந்திய அறவியலில் தமிழ்ச் செவ்வியலின் பங்களிப்பு

**முனைவர் மோ.கிறிஸ்டி,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி,திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-4221-4299**
**DOI: 10.5281/zenodo.7583771**

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்திய அறவியல் என்பது பொதுமையாக நோக்குமிடத்து, சமயங்களின் வழியாகவே சமூகத்திற்குச் சென்றது போலத் தோற்றமளிக்கும். ஆனால், சமய நூல்களில் கூறப்படுகின்ற சமயம்சார் அறங்களைத் தவிர்த்து, பிற இந்திய இலக்கிய நூல்களைக் குறிப்பாக, இந்தியச் செம்மொழிகளில் ஒன்றான தமிழின் பழமையான இலக்கியங்களை ஆய்வு செய்யும்போது சமூகத்திலும், நடைமுறை வாழ்க்கையிலும், நாட்டுப்புற வழக்காறுகளிலுமிருந்தும் கூட, சமூகத்திற்கான அறவியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. சான்றாக, இல்லறம்சார் அறக்கருத்துகள் தென்னிந்திய இலக்கிய வகைகளிலிருந்தே பெறப்பட்டிருக்கக்கூடும் என்பதற்குப் போதுமான வலுவான சான்றுகள் இருக்கின்றன. வாழ்விற்கு உறுதி அளிக்கின்ற முப்பொருள்களான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் இன்பம் குறித்த அறங்கள் தமிழில் ஆண் - பெண் துய்க்கின்ற இன்பத்தின் அறம்சார் நிலைகளை எடுத்துக்காட்டுகின்றனவாக அமைகின்றன. சங்க இலக்கியத் தொகைநூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றிலும், திருக்குறள் போலும் அற நூல்களிலும் இல்லறம்சார் அறக்கருத்துகள் வலுவாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன எனலாம். உலகிலுள்ள பிற நாடுகள் இந்தியாவின் மேல் கொண்டுள்ள மதிப்பு என்பது அதன் பண்பாடு, குறிப்பாக பன்முகத்தன்மை கொண்ட ஒற்றுமையிலேயே அடங்கியுள்ளது. எனவே, அறம் குறித்த புரிதல்களை இளைய தலைமுறையினரிடமும், சிறாரிடமும் கொண்டு செல்ல வேண்டிய தேவை மிகுந்திருக்கின்றது. அதன்வழி, இந்தியா என்னும் பன்முகத் தேசிய இனங்களில் காணப்படுகின்ற அறம்சார் கருத்துக்களைப் பொதுவாக எடுத்துக்கொண்டு, அவற்றில் பழந்தமிழின் பங்கு குறித்தும், அது கொடுத்துப் பெற்றுக்கொண்ட பரிமாற்றங்கள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள்:** அறம், பொருள், இன்பம், அறவியல், பொய்மை-வாய்மை.

**முன்னுரை**

இந்திய அறவியல் என்பது இயல்பான மனித வாழ்வுடனும், சமுதாயம் சார்ந்த பண்பாட்டுடனும் நெருங்கியத் தொடர்பு கொண்டது. மிக இயல்பாக, சமூகப் பழக்க வழக்கங்களிலிருந்து உருவான ஒழுக்கம் மற்றும் நடத்தை சார்ந்த நெறிமுறைகள், சமயங்கள்

உருவான பிற்காலத்தில், அச்சமயங்களால் உள்வாங்கிக் கொள்ளப்பட்டு, மனிதர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டிய அறங்களாக வற்புறுத்தப்பட்டன எனலாம்.

இந்தியச் சமயங்களின் நிலைபேற்றில் இவ்வறம்சார் கருத்துகளுக்கு இன்றியமையாத பங்குண்டு என்பது கருதத்தக்கது. சமயங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டது இவ் அறம் சார் கருத்துக்களே என்று கூறுவதும் மிகையாகாது. இந்திய அறங்கள், பெரியவர்கள் கூறுவதும் மிகையாகாது. இந்திய அறங்கள், பெரியவர்கள் சிறியவர்களுக்கு அறிவுறுத்துவது போலவும், முற்றுணர்ந்த ஞானி மாணவர்களுக்குக் கூறுவது போலவும், முற்றுணர்ந்த ஞானி ஒருவர் மக்களுக்குக் கூறுவது போலவும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றிற்கு *திருக்குறள், பகவத் கீதை* போன்ற நூல்களைச் சான்றாகக் கூறலாம். மேலும், இதிகாசம் மற்றும் புராணங்களில் கதைகளின் வாயிலாக உணர்த்தப்படுகின்ற அறங்களும் காணக்கிடக்கின்றன. ஒரு நாட்டின் பண்பாடு அந்நாட்டின் அறநூல்களில் அடங்கியிருக்கின்றது. இந்திய சிந்தனையாளர்களுள், உலகம் தழுவிச் சிந்தித்த வள்ளுவர் தமிழ்ப்பண்பாட்டினை உலகறியச் செய்து இருக்கிறார். தனிமனித உணர்வுகள், பழக்க வழக்கங்கள், சிந்தனைகள், செயல்பாடுகள் போன்றவைதான் ஒரு சமூகத்தின் பண்பாட்டினை நிர்ணயிக்கின்றது என்பதேயாகும். பண்பட்ட மனதினை உடைய ஒவ்வொரு தனிமனிதனும் சிறந்த சமூகத்தினை உருவாக்குகின்றான். இத்தகைய சிறந்த மனிதனை உருவாக்குவதில் அறங்கள் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றன. அவற்றை இலக்கியங்கள் வழியாக உணர்த்தியிருக்கின்றனர்.

பழந்தமிழ் இலக்கியங்கள் ஆண் - பெண் இணைந்து மேற்கொள்ள வேண்டிய இல்லறத்தை அடிப்படையாகக் கொண்ட காதல் அறத்தை மையமாகக் கொண்டதென்றாலும், பொதுவான அறங்களும் மிகுந்து காணப்படுகின்றன. இல்லறம், காதலறத்தைத் தவிர்த்துப் பிற அறங்களும் பேசப்படுவதைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. இவ்வகையில் பழந்தமிழ் இலக்கியங்களும், அவற்றின் இலக்கிய மரபை உட்கொண்டு தோற்றம் பெற்ற பிற்கால இலக்கியங்களும், இலக்கிய வகைமைகளும் இல்லறத்தின் வழியாக சமூக அறத்தைப் பேணுவதில் சமுதாயத்திற்கு இன்றியமையாதப் பங்காற்றியுள்ளன. அவற்றை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**அறம் பற்றிய சிந்தனை**

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழ்மொழியில் அறம் சார்ந்த கருத்துகள் இயல்பாகவே அமைந்துள்ளன. அறம் என்பது கைம்மாறு கருதாமல் பிறருக்குச் செய்யும் தொண்டாகும். தொல்காப்பியத்தில் வாகைத்திணை, காஞ்சித்திணை, பாடாண் திணை முதலிய புறத்திணைகளைப் பற்றிக் கூறும் துறைகள் பிற்கால அறநூல்களின் எழுச்சிக்கு அடிப்படையாய் அமைந்தன..

**அந்நிலை மருங்கின் அறமுதலாகிய**
**மும்முதற் பொருட்கும் உரியஎன்ப (தொல். செய். நூற்பா. 102)**

உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள் குறித்துச் செப்பியுள்ளார் இளம்பூரணர்,

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்போடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல், பொருள், 92)**

என்று தொல்காப்பியத் தொடர்கள் இதனை உறுதி செய்கின்றன. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்போடு புணர்ந்த ஐந்திணை ஒழுக்கத்தைப் பாட வந்த அக இலக்கியங்கள் இனிய எளிய தொடர்களில் உயர்ந்த அறக்கருத்துக்களை இடையிடையே கூறியுள்ளன.

சங்க இலக்கியங்கள் காதலையும், வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. இருப்பினும் பெரிதும் அறக்கருத்துக்களையும், அவ்விலக்கியங்கள் போற்றுகின்றன. எடுத்துக்காட்டாக,

**‘‘அறனும் அன்றே ஆக்கமும் தேயும்’’ என்று நற்றிணையும்,**
**‘‘திறவோர் செய்வினை அறவது ஆகும்’’ என்று குறுந்தொகையும்,**
**‘‘அறம்புரி அருமறை நவின்ற நாவின்’’ என்று ஐங்குநுறூறும்,**
**‘‘ஞாயிறு திங்கள் எறனும் ஐவரும்’’ என்று பரிபாடலும்,**
**‘‘பிறர் நோயுந் தந்நோய் போல் போற்றி**
**அறனந்தல்’’ என்று கலித்தொகையும்,**
**‘‘அறன் கடைப் படாஅ வாழ்க்கையும்’’ என்று அகநானூறும்**

அறக்கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது. வள்ளுவம் ‘தமிழனுக்குரியது’ என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவருக்கும் உரியதாக உள்ளதை உணர்ந்த பாரதி, ‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’ என்று புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட்சிறப்பை உணர்ந்த மதுரைத் தமிழ் நாகனார் ‘எல்லா பொருளும் இதன் பால் உள’ என்று தெளிந்துரைத்துள்ளார்.

முதன்மைப்பயனாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவற்றை அறியவைத்து பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழிகாட்டுகிறது. மனித மனங்களை விரிவுப்படுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்கமாகவும் உள்ளது. மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே, அறங்களில் முழுமையாகவும், மனித வாழ்க்கையின் நெறியாகவும் உள்ளது என்கிறார்,

**அறமெனப்படுவது யாதெனக் கேட்டின**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்” (மணிமேகலை: 228 - 231)**

என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர். மனத்தூய்மை, ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதின் தேவையை உணர்த்தியுள்ளார்.

**குடும்பம்**

மனிதர்கள் கூடிவாழும்போது சமூகம் உருவாகிறது குடும்பம் ஒரு சமுதாயத்தின் அடித்தளமாக அமைகிறது. குடும்பத்தினுடைய வாழ்வின் நிலை தான் ஒரு சமுதாய அமைப்பினை நிர்ணயிக்கிறது. சமுதாயத்தில் காணப்பெறும் நிறுவனங்களில் ஒன்றாகிய குடும்பம் உலக சமுதாயங்கள் அனைத்திலும் காணப்பெறும் சிறப்புடையது. குடும்ப நிறுவனத்தின் இன்றியமையாத ஓர் அங்கமாகத் திருமணம் நிகழ்கின்றது. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்கள் குடும்பத்தை நிறுவிக்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சமுதாய முறை. அன்புடன் கூடிய களவு வாழ்க்கையில் தலைமக்களிடையே பொய், வழு தோன்றிய பிறகு, பெரியோர்கள் முன்பாகச் சடங்குகளுடன் கூடிய மன்றல் விழா நடைபெறுவதை,

**கற்பெனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்கு மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (நூற்பா. 140)**

என்றும்,

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொல், கற், 4)**

சமூகத்தில் சூதும் வாதும் நிறைந்த காலகட்டத்தில் சமூக உறுப்பினர்களான மனிதர்கள் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை, ஒழுங்கை உருவாக்க வேண்டும் என்ற காரணத்தினால் இவ்வமைப்பு முறையைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளதைக் காணலாம்.

வேதமும் மனுஸ்மிருதியும் மனித வாழ்க்கையை நான்கு நிலைகளாகப் பிரிக்கின்றன. அந்த நாங்கு நிலைகள் பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம் மற்றும் சன்னியாசம் என்று அழைக்கப்படுகின்றன. முதல் நிலையில் (4-24 வயது) குருவின் வீட்டில் தங்கியிருந்து தன் குலத்துக்கேற்ற கல்வி கற்கிறான். திருமணம் செய்து கொள்ளக்கூடாது. இரண்டாம் நிலையில் (24-48 வயது) திருமணம் செய்து மனைவி மக்களுடன் வாழ்கிறான். மூன்றாம் நிலையில் (48-74 வயது) தன் மனைவியுடன் காட்டுக்குச் சென்று, தன்னுடைய பற்றுகளைக் குறைத்துக் கொண்டு வாழ்கிறான். கடைசிநிலை 74 வயது முதல் வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது. இந்த நான்கு நிலைகளும் பிராமணர்களுக்கும், சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கு மட்டுமே உரியது. சூத்திரர்களுக்கும் இந்த நான்கு நிலைகளுக்கும் எந்தத் தொடர்பும் இருப்பதாகக் கூறப்படவில்லை. சூத்திரர்கள் பிராமணர்களுக்கும், சத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும் பணி செய்வதற்காகவே படைக்கப்பட்டவர்கள். இந்தக் கருத்துக்களை மனுஸ்மிருதியில் காணலாம்.

தமிழ்ச் சமுதாயத்தில் எவரும் இல்லறவாழ்க்கைக்குப் பிறகு தன்மனைவியோடு காட்டுக்குச் சென்று வாழ்ந்தார்கள் என்பது இல்லை. திருக்குறளில் அவாவை அறுத்தால் பிறவாத நிலையை அடையலாம் என்ற கருத்து காணப்படுகிறது. அவாவை அறுப்பதற்குத் துறவறம் துணைபுரியும் என்ற கருத்தும் காணப்படுகிறது. ஆனால், துறவறம் மனிதனின் வாழ்க்கையில் ஒருநிலை என்ற கருத்தோ, அல்லது ஒருவன் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டியது என்ற கருத்தோ இல்லை. ஒருவன் விரும்பினால் துறவறம் மேற்கொள்ளலாம் என்ற கருத்தே,

**வேண்டின் உண்டாகத் துறக்க; துறந்தபின**
**ஈண்டு இயற்பால பல (குறள் - 342)**

என்கிறார் வள்ளுவர். ஆகவே, சங்ககாலத்திலும், வள்ளுவர் காலத்திலும் திருமணம் செய்து கொண்டு மனைவி மக்களுடன் இல்லறத்தில் வாழ்வது தான் தமிழர்களின் வாழ்க்கை நெறியாக உள்ளது மேலும்,

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவது எவன்? (குறள்- 46)**

ஒருவன் இல்வாழ்க்கையை அதற்குரிய அறநெறிப்படி நடத்துவானாயின் அதற்குப் புறம்பாகிய வேறு நெறிகளைப் பின்பற்றுவதால் பெறும் பயன் என்ன? என்ற வினாவை வள்ளுவர் எழுப்புகிறார்: அதோடு மட்டுமல்லாமல் அறம் தவறாமல் இல்லற வாழ்வில் ஈடுபட்டு உள்ளவர்கள், மற்றவர்களை நல்லநெறியில் ஆற்றுப்படுத்தி உதவிசெய்யும் செயலானது தவம் புரிபவர்களின் தவத்தை விட வலிமையானது. மேலும், தமிழர்கள் அறத்தோடு பொருந்திய இல்வாழ்வினை மேற்கொண்டனர் என அறிய முடிகிறது. திருமண வாழ்வை இல்லறம் என்றனர் இல்லறம் = இல் + அறம் என்ற சொல்லானது இல்லத்திலிருந்து அறவாழ்க்கை வாழ்வதை குறிக்கிறது. குறளில் கூறப்பட்டுள்ள அறங்களைப் பின்பற்றி, ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் அனைவரும் கூடி பிறரால் பழிக்கப்படாத தூய்மையான இல்லற வாழ்க்கை வாழ்வதுதான் ‘‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்’’ என்பது வள்ளுவரின் கருத்தாகத் தோன்றுகிறது. அத்தகைய இல்லற வாழ்க்கை, ஆரியக் கருத்துக்களின் அடிப்படையில் தோன்றிய மற்ற வாழ்க்கை நெறிகளைவிடச் சிறந்தது என்பதை வள்ளுவர் நெறிகளைவிடச் சிறந்தது என்பதை வள்ளுவர் இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் வலியுறுத்துகிறார். மேலும், இல்லறம் நடத்துகின்ற பெண்களுக்கு வேண்டிய அன்பு, அருள், ஒழுக்கம், பொறையுடைமை, உறவினர்களை மனமுவந்து உபசரிக்கும் விருந்தோம்பும் பண்பு போன்ற நற்பண்புகளை எடுத்துக்கூறி, குடும்பத்திற்கு விளக்காகத் திகழும் பெண்களுக்கு அன்பும் அறனும் கொண்டுருந்தாலே இல்லறம், நல்லறமாக மாறி சமுதாயம் ஏற்றம் பெறும் என்பது உறுதி.

**காதலறம்**

**உடம் பொடு உயிரிடை என்னமற் றன்ன**

**மட ந்தையொடு எம்மிடை நட்பு (குறள்: 1122)**

ஒவ்வொருவரின் இல்லற வாழ்க்கை திருமணத்தில் இருந்தே தொடங்குகிறது. இக்குறட்பாவில் தலைவியும் தலைவனும் கொண்ட நட்பு, உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்புக்கு ஈடானது என்கிறார் வள்ளுவர்.

காமத்துப்பால் அறவழிப்பட்ட காதலுறவுகளை எடுத்துரைத்துள்ளது. காதலையும், ஆண் - பெண் உறவையும் வள்ளுவர் நெறிப்படுத்தியுள்ளார். காமத்துப்பாலில் காதல், காதலர் உறவுநிலை ஆகியவற்றை இனிமை பயக்கப்பாடி, மாசுபடாத வாழ்வியல் படிநிலையை வடித்துத்தந்துள்ளார். களவையும், கற்பையும் வகைப்படுத்தி 'மனிதம்' அடையும் வாழ்க்கை நெறியை வள்ளுவர் தந்துள்ளார். பிறன்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும், பெருங்குற்றமாகச் சொல்லி அன்புடைய காமத்தைச் சமுதாய அறமாகத் தந்துள்ளார். ஆண் - பெண் உறவுநிலை, திருமணத்திற்கு முன்னும் பின்னுமாகக் காதல் நிலை ஆகிய செய்திகளைக் குறள் விரிவாகப் பேசுகிறது. ஆண் - பெண் சமத்துவம் வள்ளுவரின் கொள்கையாகக் காணப்படுகிறது. ஆண் மேலாதிக்கக் காலத்தில், அதற்கெதிரான, துணிவுடைய சிந்தனைகளை வழங்கியுள்ள வள்ளுவரின் 'அணுகுமுறை புரட்சிகரமானது' பெண்களின் உரிமைக்காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவர்கள். ஆற்றல், மிக்கவர் என்பதை,

**சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை (குறள்: 57 )**

என்று ஆற்றலும் அறிவும் நிறையும் மிக்க பெண்களை உலகுக்கு உருவாக்கித் தந்தவர் வள்ளுவர்.

அன்பு, அறிவு, ஆற்றல், திரு, உரு முதலிய பண்புகளில் ஒன்றிய தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லறத்தின் மாட்சியைக் குறுந்தொகைப் போற்றும் விதமாவது,

**ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை**
**பெருநலக் குறுமகள் வந்தென**
**இனவிழ வாயிற்றென்னும் இவ்வூரே (குறுந். 295)**

ஒரு பசுவினை மட்டுமே வளர்த்து அதனால் வரும் செல்வத்தைக் கொண்ட எளிய வாழ்வு நடத்திய ஒருவன், தலைவியை மணந்தநாள் முதலாகப் பெருவாழ்வு பெற்று ஒவ்வொரு நாளும் விழாக்கோலம் பூண்டவீட்டை உடையவனாகத் திகழ்ந்தான்'' என்றும்,

**மனைத்தக்க மாண்புடையவள் ஆகித்தன் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள்: 51)**

மனைக்கு மாண்புடையவளாக கணவனுக்குப் பெருமை ஏற்படும் வகையில் இல்வாழ்க்கை நடத்த சிறந்த குணங்கள் வேண்டும் என்பதை தொல்காப்பியர்,

**செறிவும், நிறைவும், செம்மையும் செப்பும்**

**அருமையும், பெண்பாலர்க்கு உரிய (தொல்.பொரு.நூற்பா: 206)**

என்கிறார்.

**சுனைவாய்ச் சிறுநீரை பெய் தாதென் றெண்ணிப்**
**பிணைமா னினிதுண்ண வேண்டி கலைமாத்தன்**
**கள்ளத்தி னூச்சுஞ் சுரமென்பர் காதல**
**ருள்ளம் படர்ந்த நெறி (ஐந்திணை ஐம்பது: 38)**

பாலை நிலத்தில் காதல் மிகுந்த ஆண்மானும், பெண்மானும் ஓடிக்களைத்து தாகம் தீர்க்கவேண்டி, அங்குமிங்கும் அலைகின்றன. ஒரு சுனையில் இருக்கும் சிறிதளவு நீரைக் கண்டவுடன் இருவரும், அருந்துவபோல் பாவனை செய்தது. சுனையின் நீர் தீரவே இல்லை. தங்கள் காதலினை அந்த இருமான்களும் வெளிப்படுத்திய விதத்தை வெளிப்படுத்துகிறார் மாறன் பொறையனார்.

காதல் வாழ்விலும், இல்லற வாழ்விலும் கணவனும், மனைவியும் எவ்வாறு தாமாக விட்டுக் கொடுத்து காதலுடன் வாழவேண்டும் என்று மனிதருக்கு அஃறிணை உயிர்கள் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. காதல் என்பது உடற்காமம் அன்று அதனையும் கடந்து மனதளவில் உயர்ந்து நிற்பதாகும். மனைவியின் உடல் அழகு நீங்கி நரையோடு முதுமை வந்த போதும் கணவன் அவளைப் போற்றுவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதை,

**பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த**
**நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்**
**நீத்த லோம்பு மதி பூக்கே பூர (நற்றிணை: 10)**

என்ற நற்றிணைப் பாடலால் அறியலாம். இதுமட்டுமன்றி, ஓர் ஆடையைக் கிழித்து இருவருவரும் உடுத்திக்கொள்ளும் வறுமை வந்த போதும் கணவன், மனைவி இருவரும் அன்பினால் ஒன்றி வாழ்வதே இல்லற மாண்பாகக் கலித்தொகைக் கூறும் பாடலானது,

**ஒரே ஒகை தம்முள் தழீஇ, ஒரோஒகை**
**ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை (கலித்தொகை: 18)**

என்று கூறுவதைக் காணமுடிகின்றன.

தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் 214 ஆம் பாடலில் இலக்கியம், அறம் சார்ந்ததாக இருந்தாக வேண்டும் என வலியுறுத்துகிறார். அறம் சாராத நடைமுறைகள் உலக வழக்கில் இருந்தாலும் அவற்றை மரபு எனக் கொண்டு இலக்கியம் படைப்பது பழிக்குரியதாகும் என்பதை,

**அறக்கழிவு உடையன பொருட்பயன் வரினே**
**வழக்கென வழங்கலும் பழித்தது என்ப (பொரு: 22)**

என திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார். மேலும், பொரு. 190 ஆம் பாடலில், களவிலும், கற்பு வாழ்ககையிலும், இன்பம் நுகர்ந்து, அறத்தோடு கூடிய பெருவாழ்வு வாழ்ந்த தலைவனும்

தலைவியும், முதுமையில் தம் மக்களோடும் சுற்றத்தோடும் பாதுகாப்போடும், பெருமதிப்போடும் சிறந்த முறையில் வாழ்ந்து இறத்தலே பேரின்ப வாழ்வாகும் என்பதை,

**காமம் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனும், கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததான் பயனே (கற்பியல் - 51)**

என்ற இப்பாடலானது துறவறம் குறித்தோ வீடு குறித்தோ பேசவில்லை. இந்த வாழ்க்கை மிகச்சிறந்த முறையில் வாழ்வதே பேரின்பவாழ்வு எனக் கூறுகிறது.

ஒழுக்கமும் பண்பும் உள்ள உயர்ந்தவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளைப் பின்பற்றி நடந்தால், வீடும், நாடும் நல்ல வழியில் செல்லும். முன்னோர்கள் சொன்ன சொற்களைப் பொன்போல் போற்றி வாழ்க்கையை நடத்துவதால், இல்லறம் நல்லறமாக விளங்கும் என்பதைத் தொல்காப்பியர்,

**“பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக்கிளந்து” (நூற்பா: 148)**

**“தொல்லோர் கிளவி” (நூற்பா: 111)**

**“மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்” (நூற்பா: 115)**

என்பதன் மூலம் உயர்ந்தவர்களிடம் பற்றும், மரியாதையும் கொண்டு, அவர்கள் கூறிய நற்கருத்துக்களைப் பின்பற்றி வாழ்ந்தனர் என்பதை அறியலாம்.

**விருந்தும் மகளிரும்**

வந்த விருந்தினரை முகங்கோணாமல் வரவேற்று உதவி செய்யும் பண்பு பெண்களின் இயற்கை குணமாகும்.

**அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின் மெல்இயல் குறுமகள் (நற்றிணை: 142)**

இரவு நேரமானாலும் வந்த விருந்தினரைக் கண்டு மகிழ்ச்சியடையும் முல்லை ஒழுக்கம் நிறைந்த கற்பினையுடைய பெண் என்று, விருந்தோம்பும் தன்மை தமிழ்ப்பெண்களின் பிறவிக்குணம் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. மேலும் கம்பராமாயணத்தில்,

கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் வாழும் மனையிலே வறியவர்கள் பொருள் பெற்றுச் செல்கின்றனர். எப்பொழுதும் விருந்தினர் கூடியிருந்து உண்ணுகின்றனர். இவ்விரண்டைத் தவிர அவ்வீடுகளில் வேறு சிறந்த செயல்கள் எதுவும் நடக்கவில்லை என்று,

**பெருந் தடம்கண் பிறைநுதலார்க் கெல்லாம்**

**பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்**

**வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்**

**விருந்தும் அன்றி விளைவன யாவையே (கம்ப. 1: 2: 36)**

பெண்களின் விருந்தோம்பும் சிறப்பைப் பற்றி கூறுகிறார்.

செல்வம் நிறைந்த வீட்டுப் பெண்களாயினும் சரி, வறியவர் வீட்டுப் பெண்களாயினும் சரி, விருந்து செய்வதிலேயும், விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று பேணுவதிலும் ஆவல் மிகுதி. மேலும் மனம், சொல், செயல் ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து இருக்கும் போது தான் எந்த நற்செயலும் செய்யப்பட வேண்டும்.என்று இனியவைக்கூறல் என்னும் அதிகாரத்தில் கூறுகிறார்.

**அகனமர்ந்து இதலின் நன்றே முகனமர்ந்து**

**இன்சொல னாகப் பெறின் (குறள்: 92)**

அன்பு நிறைந்த உள்ளத்திலிருந்து வரும் சொற்கள் அறத்திற்குப் புறம்பாக இருக்காது. இனிய சொற்களை உடையவன், பிறருக்குத் துன்பம் விளைவிப்பதன் மூலம் தான் இன்பம் பெற நினைக்க மாட்டான். எக்காரணம் கொண்டும் பொய் சொல்ல மாட்டான். பிறர் உடமையைப் பறிக்க மாட்டான். இத்தகைய மேலான ஒழுக்கநெறி படைத்தவன் இயற்கையாகவே வீருந்தினரை உபசரிக்கும் போது இனிய சொற்களையே பயன்படுத்துவான். இதனையே முழுமனத்துடன் அளிக்கப்படும் தானத்தை விட, புன்முறுவலுடன் மகிழ்ச்சியுடன் கூடிய சொல் சாலச் சிறந்தது என்கிறது பொதுமறை. இன்று நமது நாட்டுப் பெண்களிடம் நடையுடைகளில் எவ்வளவோ மாறுதல்கள் காணப்பட்டாலும், தமிழ்ப் பண்பாடு நம்நாட்டுப் பெண்களை விட்டு ஓடிப்போய்விடவில்லை. கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள் இருப்பினும், விருந்தினர் வந்தால் அவர்கள் சண்டை ஓடிப்போகும். விருந்தினர் எப்பொழுதும் இருக்கும் குடும்பத்தில் சண்டைகள் அதிகம் காணப்படுவது இல்லை. இது இலக்கியத்தில் மட்டுமன்றி நம்முடைய குடும்ப உறவுகளிலேயும் காணமுடியும். காதல் வாழ்வில் மட்டுமல்லாமல் விருந்தினரைப் பேணுதலிலும் தம்பதியினர் சிறந்து விளங்கினர்.

**பொய்மை – வாய்மை**

பொய் சொல்லக் கூடாது பாப்பா என்று பாரதி பாப்பாவுக்குக் கூறுகிறார். அத்துடன் பொய்யை இகழ் என்று வலியுறுத்துகிறார். பொய்மை எங்கிருந்தாலும் சரி, அதை காரி உமிழவேண்டும் என்றும் இகழ்ந்து நிராகரிக்க வேண்டும்.

**பயமெனும் பேய்தனை யடித்தோம் – பொய்மைப்**

**பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம் (புதிய ஆத்திசூடி, பா.73)**

என்று பொய்மையைப் பாம்பிற்கு ஒப்பிட்டு அதன் உயிரைக் குடித்து கொன்று வீச வேண்டும் என்று பாரதி வலியுறுத்திக் கூறுகிறார். இதனையே வள்ளுவர்,

**பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**

**நன்மை பயக்கும் எனின் (குறள் - 292)**

பொய்மையும் வாய்மை போன்றதே என்கிறார். அதாவது குற்றம் தீர்த்து நன்மை செய்யும் என்றால் பொய்மையும் வாய்மை (உண்மை) போன்றது ஆகும். உண்மை என்பது அடுத்தவருக்கு துன்பம் தராமல் இருப்பது. குற்றமே இல்லாத ஒரு நன்மையைத் தருமானால் பொய் சொல்வதில் த வறு ஒன்றும் இல்லை என்பது தான். உள்ளதை உள்ளவாறே கூறினால்

சில நேரங்களில் நல்லவர்களுக்குக் கூட தீங்கு நிகழ வாய்ப்பு உண்டு. அத்தகைய தீங்கிலிருந்து ஒருவரைக் காப்பாற்ற பொய் சொல்லலாம் பொய்யினால் தூய நன்மை நிகழுமானால் பொய்யையும் மெய்யாக ஏற்றுக்கொள்ளலாம் என்கிறார். இந்திய இதிகாசங்கள் புராணங்கள் மற்றும் நீதிநூல்கள் போன்றவை பொய் சொல்லக்கூடாது என்ற அறத்தை வலுவாகக் குறிப்பிட்ட போது, திருக்குறள் மட்டும் "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என்று பொய் கூறுவதற்கும் ஒரு விதிவிலக்கு அளித்திருப்பது இங்கு சுட்டத்தகுந்ததாகும். இவை போன்ற அறக்கருத்துக்களே இந்திய அறவியலைச் செம்மைப்படுத்துகின்றன.

**முடிவுரை**

'நீதிநூல் பயில்' என்றார் பாரதியார், தமது ஆத்திசூடியில். 'அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே' என்பது தண்டியலங்கார நூற்பாவின் கூற்று. பழங்கால முதலாகவே இந்தியச் சிந்தனையில் புருஷார்த்தங்களாவது பொருட்பேறுகள் என்ற கருத்து உண்டு. மனிதன் வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் என்பது இதன் கருத்து. தமிழ் அறவியலுக்கு இந்திய அறவியலுக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. இந்திய அறவியல் மரபின்படி அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் அடைய வேண்டியவை தமிழ் அறவியலில் மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம், பொருள், இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து இல்லை. இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட தமிழில் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன.

அறவாழ்வானது இயல்பான மனித வாழ்வுடனும், சமுதாயம் சார்ந்த பண்பாட்டுடனும் நெருங்கிய தொடர்பு கொண்ட்து. அறங்கள் உணர்த்தப்படுவதற்கான காரணம் தனிமனித உணர்வுகள், பழக்கவழக்கங்கள், சிந்தனைகள், செயல்பாடுகள் போன்றவைதான். பண்பட்ட மனதினை உடைய ஒவ்வொரு தனிமனிதனும் சிறந்த சமூகத்தினை உருவாக்குகின்றான். இந்தியத் துணைக் கண்டம் பல்வேறு மொழிகளையும், இனங்களையும், பண்பாடுகளையும் கொண்ட மக்கள் ஒன்று கூடி வாழ்கின்ற கூட்டுச் சமுதாயமாக இருக்கின்றது. இந்தச் சமுதாயமானது அறம், பொருள், இன்பம் என்ற உறுதிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அறம் சார்ந்த கருத்துக்களின் வழியாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் பழம்பெரும் மொழிகளில் ஒன்றாக விளங்குகின்ற தமிழில் அறவியல் கருத்துகள் அமைந்துள்ள முறையையும் அவை சமூக வளப்படுத்தலில் ஆற்றியுள்ள பணிகளையும் வாழ்வியல் வழி அறியப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

[1] இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம்.* சாரதா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2006.

[2] முனைவர் சு. உஷா ராணி. *பாரதியார் கவிதைகள்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2019.

[3] பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன். *மணிமேகலை.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2 004.

[4] நாமக்கல் கவிஞர் உரை. *திருக்குறள்.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1999.

[5] சாலமன் பாப்பையா. *புறநானூறு.* கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதல் பதிப்பு, 2019.

[6] முனைவர் இரா. செயபால். *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.

[7] முனைவர் அ. தட்சிணாமூர்த்தி. *ஐங்குறுநூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.

[8] அறிஞர் ச. வே. சுப்பிரமணியன். *கலித்தொகை.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1981.

[9] முனைவர் வி. நாகராசன். *குறுந்தொகை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.

[10] முனைவர் கு. வெ. பாலசுப்ரமணியன். *நற்றிணை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு, 2007.

[11] சா.வே.சுப்பிரமணியன். *பரிபாடல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு, 2010.

[12] ந. சுப்ரமணியன். *சங்க கால வாழ்வியல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1986.

[13] கோபால கிருஷ்ணமா சாரியார், வை. மு.(உரை). *கம்பராமாயணம்.* பாலகண்டம். உமா பதிப்பகம், சென்னை, 2006.

[14] பழைய உரையாசிரியர்கள். *பதினென்கீழ்க்கணக்கு நூல்கள், ஐநதினை ஐம்பது.* மாணவர் பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 2014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.